பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை

**27 08 2025** **7 15**

புதன்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1)** இந்தியா ஒருபோதும் போரையோ, ஆக்கிரமிப்பையோ முன்னெடுப்பதில்லை என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

**2)** அமெரிக்கா விதித்துள்ள **50** சதவீத வரி, இந்தியப் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தாது என்று வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது,

**3)** இந்தியாவும்-ஜிம்பாப்வே-யும் தொழில்நுட்பம், உள்கட்டமைப்பு மேம்பாடு உள்ளிட்ட துறைகளில் கூட்டு முயற்சிகளை வலுப்படுத்தியுள்ளதாக அந்நாட்டின் துணை அதிபர் டாக்டர் **Chiwenga** தெரிவித்துள்ளார்.

**4)** முப்படையினரின் சிறப்புப் படை பிரிவுகள் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான இரண்டு முக்கிய கோட்பாடுகளை முப்படைத் தளபதி ஜெனரல் அனில் சௌஹான் இன்று வெளியிட்டுள்ளார்.

**5)** **2030**ஆம் ஆண்டு காமன்வெல்த் போட்டிகளை குஜராத் மாநிலம் அகமதாபாதில் நடத்துவதற்கான ஏலத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

<u>இனி விரிவான செய்திகள்---</u>

<<<<>>>>

இந்தியா ஒருபோதும் போரையோ, ஆக்கிரமிப்பையோ முன்னெடுப்பதில்லை என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் டாக்டர் அம்பேத்கர் நகர் ராணுவ போர்ப் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற முப்படைகளின் கருத்தரங்கில் உரையாற்றிய அவர், எப்போதுமே அமைதியை விரும்பும் இந்தியா ஆக்கிரமிப்புகளுக்கு உறுதியான பதிலடி கொடுக்கவும் தயங்காது என்று தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு எல்லைப் பகுதியில் உள்ள படைவீரர்கள் மட்டுமின்றி விஞ்ஞானிகள் மற்றும் நவீனதொழில்நுட்பங்களின் உதவியுடன் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

பாதுகாப்புக்கு தேவையான தளவாடங்கள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுவதாக அவர் கூறினார்.

ஒற்றுமையுடனும், உறுதிப்பாட்டுடனும் நாட்டை முன்னெடுத்துச் செல்லவும், **2027**ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கவும் அனைவரும் இணைந்து பாடுபட வேண்டும் என்று திரு. ராஜ்நாத் சிங் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

அமெரிக்கா விதித்துள்ள 50 சதவீத வரி இந்தியப் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தாது என்று வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. கீர்த்திவர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், எந்தவொரு சூழ்நிலையயையும் எதிர்கொள்ளும் வகையில் நாட்டின் பொருளாதாரம் வலிமையாக உள்ளது என்று குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்பால் ஏற்பட்டுள்ள சூழ்நிலையை எதிர்கொள்ள மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாக அவர் கூறினார்.

நாட்டின் பொருளாதாரம் பாதிப்படைய ஒருபோதும் அரசு அனுமதிக்காது என்றும் திரு. கீர்த்திவர்தன் திட்டவட்டமாக தெரிவித்தார்.

<<<<>>>>

2030ஆம் ஆண்டு காமன்வெல்த் போட்டிகளை குஜராத் மாநிலம் அகமதாபாதில் நடத்துவதற்கான ஏலத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தில் இந்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏலத்திற்கு அனுமதி கிடைக்கும்பட்சத்தில் மத்திய அரசு சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் மற்றும் துறைகள் குஜராத் அரசுக்கு தேவையான நிதியை வழங்குவதற்கும் அமைச்சரவையின் ஒப்புதல் கிடைத்துள்ளது.

2030ஆம் ஆண்டு நடைபெறும் இந்த காமன்வெல்த் போட்டிகளில் 72க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்க உள்ளன.

<<<<>>>>

இந்தியாவும்-ஜிம்பாப்வே-யும் தொழில்நுட்பம், புதுமைக் கண்டுபிடிப்புகள், மாற்று எரிபொருள் உட்கட்டமைப்பு மேம்பாடு ஆகிய துறைகளில் கூட்டு முயற்சிகளை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக அந்நாட்டின் துணை அதிபர் டாக்டர் Chiwenga தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இந்திய தொழில் கூட்டமைப்பினர் ஏற்பாடு செய்திருந்த இந்திய-ஆப்ரிக்க வர்த்தக மாநாட்டில் உரையாற்றிய அவர், வெளிப்படையான வர்த்தகம் மேற்கொள்ள ஜிம்பாப்வே எப்போதும் தயாராக உள்ளதாக கூறினார்.

இந்தியாவும் ஜிம்பாப்வே-யும் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான முயற்சிகளை நெடுங்காலமாக இணைந்து மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. கீர்த்திவர்தன் திறன்மேம்பாடு, வேலைவாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றை பரஸ்பரம் 2 நாடுகளிலும் மேம்படுத்துவதற்கு இருதரப்பு ஒத்துழைப்பு அவசியமாகிறது என்று குறிப்பிட்டார்.

இந்தியாவிலும், தென்னாப்பிரிக்காவிலும் மின்னணு தகவல் மையங்கள் அமைக்கப்பட்டு இரு நாடுகளிலும் வேலை மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளுக்கான வாய்ப்புகளை அதிகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மின்னணு கட்டமைப்பை திறம்பட பயன்படுத்துவதற்கான கல்வியறிவை இளைஞர்களுக்கு அளிக்க வேண்டும் என்றும் திரு. கீர்த்தி வாசன் தெரிவித்தார்.

<<<<>>>>

முப்படையினரின் சிறப்புப் படை பிரிவுகளுக்கான இரண்டு கோட்பாடுகளை முப்படைத் தளபதி ஜெனரல் அனில் சௌஹான் வெளியிட்டுள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் டாக்டர் அம்பேத்கர் நகரில் உள்ள ராணுவ போர்ப்பயிற்சி கல்லூரியில் நடைபெற்ற முப்படையினருக்கான கருத்தரங்கில் இவற்றை வெளியிட்டுப் பேசிய ஜெனரல் அனில் சௌஹான், சிறப்புப் படைகள் இணைந்து செயல்படுவதற்கான செயல் திட்டங்கள் கொண்ட ஒரு கோட்பாடும் வான்வழி மற்றும் ஹெலிகாப்டர் மூலம் நடத்தப்படும் போர் நடவடிக்கைகளின்போது சிறப்புப் படைகள் இணைந்து செயல்படுவதற்கான கோட்பாடும் இன்று வெளியிடப்படுவதாக தெரிவித்தார்.

ராணுவ நடவடிக்கையின்போது சிறப்புப் படை பிரிவுகளின் கமாண்டர்கள் திட்டமிடுவோர் மற்றும் படைப் பிரிவுகள் இணைந்து தாக்குதல் மேற்கொள்ளும்போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகளும் இதில் வரையறுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

போர் நடவடிக்கைகளின் போது முப்படைகளின் செயல்திறனை ஒருங்கிணைத்து சிறப்பாக செயல்படுவதற்கும் இந்த இரு கோட்பாடுகளும் மிகுந்த பயனுள்ளவையாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஷ் திரிபாதி, விமானப்படைத் தளபதி ஏர்சீஃப் மார்ஷல் ஏ.பி. சிங், ராணுவ துணைத்தளபதி லெஃப்டினெண்ட் ஜெனரல் புஷ்பேந்திர சிங் அகியோர் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரின் ரியாசி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீமாத வைஷ்ணவ் தேவி கோவிலுக்குச் சென்ற யாத்ரீகர்கள் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த சம்பவத்திற்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் விடுத்துள்ள செய்தியில், இந்த துரய சம்பவத்தில் பல பக்தர்கள் உயிரிழந்திருப்பது வேதனையளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையவும், மீட்புப் பணிகள் எவ்வித தடங்கலுமின்றி நடைபெற வேண்டும் என பிரார்த்திப்பதாகக் கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், இந்த சம்பவம் தமக்கு மிகுந்த வேதனையளிப்பதாக கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தேவையான உதவிகள் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அனைவரும் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று இறைவனை பிரார்த்திப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்துள்ள விண்வெளித் துறை சீர்திருத்த நடவடிக்கைகளின் ஒருகட்டமாக தனியார் துறையினரும், செயற்கைக்கோள், ராக்கெட் தயாரிப்பு மற்றும் ராக்கெட் ஏவுவதற்கான திட்டங்களில் பங்கேற்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளதாக இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஸ்ரீஹரிக்கோட்டாவில் அடுத்த தலைமுறைக்கான மூன்றாவது ஏவுதளம் அமைக்கப்படும் என்றும்

<<<<>>>>

மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்ப துறையின் மூலம் கிராமப்புறங்களில் தனியார்துறை பங்களிப்புடன் அறிவியல் தொழில்நுட்ப மையங்கள் அமைக்கப்பட்டு அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே உள்ள செக்காரப்பட்டி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள அறிவியல் தொழிநுட்ப மையத்தின் மூலம் அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் பயன்பெற்று வருவதாக இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் சத்யபாமா தெரிவித்தார்.

<<<<>>>>

உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் துருவ் கபிலா - தனீஷா கிரஸ்டோ இணை அயர்லாந்தின் ஜோஷ்வா மேகி - மோயா ரியான் இணையை வென்றது.

பாரீசில் நடைபெற்ற இப்போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில் இந்திய இணை 21-11, 21-16 என்ற செட் கணக்கில் வென்றது.

-------------

வில்வித்தை ப்ரீமியர் லீக் போட்டிகள் அக்டோபர் 2ஆம் தேதி புதுதில்லியில் தொடங்குகிறது.

இதற்கான அறிவிப்பை இந்திய வில்வித்தை சங்கம் இன்று வெளியிட்டுள்ளது.

------------

உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டிகளுக்கான இந்திய அணி இன்று புதுதில்லியில் அறிவிக்கப்பட்டது.

ப்ரீத்திபால், சிம்ரன், ரிங்கு, தேவேந்திர குமார், அமிஷா ராவத் உள்ளிட்ட 73 இந்திய வீரர்கள் இந்தப் போட்டிகளில் விளையாட உள்ளனர்.

இப்போட்டிகள் அடுத்த மாதம் 27ஆம் தேதி முதல் அக்டோபர் 5ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

**<<<<The End>>>>**